**OS.No.386/2019 P.W.1-வெங்கடபெருமாள் 12.09.2025**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

03.09.2007 தேதியிட்ட வாதியின் மகள் திருமதி.நிர்மலா சுரேஷ் என்பவருக்கு அவரது கணவர் சுரேஷ்குமார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.1. 14.07.2014 தேதியிட்ட வாதியின் பெயருக்கு நிர்மலா சுரேஷ் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.2.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கை பட்டா கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த தாவா சொத்தானது கிராம நத்தம் வகையை சேர்ந்தது. இந்த சொத்தில் எனது அனுபவத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செட்டில்மெண்ட் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் பட்டா வழங்கும்போது உரிய ஆவணம் கொடுத்திருந்தால் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றும், உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் என் பெயரில் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரியான ஆவணங்களை தாக்கல் செய்திருந்தால் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**